பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
16 05 2024 6 45
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் முந்தைய காங்கிரஸ் அரசு அக்கறை செலுத்தவில்லை என பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.
- புலனாய்வு அமைப்புகளை பிஜேபி அரசு தவறாக பயன்படுத்துவதாக காங்கிரஸ் கூறியுள்ளது.
- தமிழகத்தில் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்துமாறு மாவட்ட நிர்வாகங்களுக்கு பொது சுகாதாரத்துறை அறிவுறுத்தியுள்ளது.
- தமிழகத்தில் 10 மாவட்டங்களுக்கு உட்பட்ட சில இடங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் பஞ்சாப் அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் ராஜஸ்தான் அணியை வென்றது.

--- இனி விரிவான செய்திகள்---

<<<<>>>>

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் முந்தைய காங்கிரஸ் அரசு அக்கறை செலுத்தவில்லை என பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

இது தொடர்பாக அக்கட்சியின் மூத்த தலைவர் திருமதி நிர்மலா சீதாராமன் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், காங்கிரஸ் அரசின் தவறான கொள்கைகள் மற்றும் முறையற்ற நிர்வாகத்தால் இந்தியா பலவீனமான பொருளாதாரமாக விளங்கியது என்று தெரிவித்துள்ளார்.

நாட்டின் நீண்டகால நலன்களை அக்கட்சி கருத்தில் கொள்ளவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

<<<<>>>>

புலனாய்வு அமைப்புகளை பிஜேபி அரசு தவறாக பயன்படுத்துவதாக காங்கிரஸ் குற்றம் சாட்டியுள்ளது.

ராஞ்சியில் செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் மூத்த தலைவர் திரு. ஜெயராம் ரமேஷ், சிபிஐ, அமலாக்கத்துறை, வருமான வரித்துறை போன்றவற்றின் செயல்பாடுகளில் பிஜேபி அரசு தலையிடுவதாக குறை கூறினார்.

எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி ஆட்சிக்கு வந்தால் இவற்றுக்கான அதிகாரங்கள் குறித்து மறுஆய்வு செய்யப்படும் என்று அவர் தெரிவித்தார்

தென் மாநிலங்களில் எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி அதிக இடங்களில் வெற்றி பெறும் என்றும் திரு. ஜெயராம் ரமேஷ் நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் கோவில் தேர்த் திருவிழாக்களின்போது அசம்பாவிதங்களைத் தவிர்க்க உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என சென்னை உயர்நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

இதுதொடர்பான வழக்கு தலைமை நீதிபதி கங்காபூர்வாலா, நீதிபதி சத்யநாராயண பிரசாத் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது.

விபத்துகளைத் தடுக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அரசு தரப்பில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

இதையடுத்து, அரசின் விதிமுறைகளை அனைத்து அதிகாரிகளும் கண்டிப்புடன் பின்பற்ற வேண்டும் என நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

<<<<>>>>

தமிழகத்தில் கோடை காலத்திலும் சில மாவட்டங்களில் டெங்கு பாதிப்புகள் பதிவாகும் நிலையில் கொசு ஒழிப்பு பணிகளை தீவிரப்படுத்துமாறு மாவட்ட நிர்வாகங்களை பொது சுகாதாரத்துறை அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக மாவட்ட சுகாதாரத்துறை அதிகாரிகளுக்கு பொது சுகாதாரத்துறை இயக்குநர் சுற்றறிக்கை அனுப்பியுள்ளார்.

அதில் திருப்பூர், கோவை, தேனி, நாமக்கல், மதுரை, அரியலூர், திருவண்ணாமலை, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் கடந்த சில நாட்களில் டெங்கு பாதிப்புகள் பதிவாகி உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைந்து டெங்கு கண்காணிப்பு மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மருந்துகள், பரிசோதனை உபகரணங்கள், மருத்துவக் கருவிகள் போன்றவை போதுமான அளவில் இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்தை மூடும் முடிவை மாநில அரசு கைவிட வேண்டும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு. அண்ணாமலை வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், சுனாமியால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மீனவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு மாநில ஊரக வளர்ச்சித் துறையின் கீழ் இந்த சங்கம் தொடங்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

இதன் மூலம் தமிழகத்தின் 236 கடலோர ஊராட்சிகளைச் சேர்ந்த மக்கள் பயனடைந்து வந்ததாக அவர் கூறியுள்ளார்.

எவ்வித காரணமும் இன்றி இந்த சங்கம் மூடப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள அவர்,

கடலோர பகுதிகளில் வசிக்கும் மக்களின் நலனில் திமுக அரசுக்கு எந்த அக்கறையும் இல்லை என்பதையே இது காட்டுவதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இந்த சங்கத்தை மூடுவது தொடர்பான அரசாணையை மாநில அரசு உடனடியாக திரும்பப்பெற வேண்டும் என்று திரு. அண்ணாமலை கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

வாக்கு வங்கி அரசியலை கருத்தில்கொண்டே பிஜேபி செயல்படுவதாக தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு. செல்வப்பெருந்தகை குற்றம் சாட்டியுள்ளார்.

சேலத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அரசின் திட்டங்களைக் கூறி வாக்கு கேட்காமல் மக்களிடையே பிளவை ஏற்படுத்தும் வகையில் பேசி பிஜேபி வாக்குகளை சேகரிப்பதாக அவர் கூறினார்.

பின்னர் தருமபுரியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகத்தைப் பொறுத்தவரை காமராஜர் ஆட்சியமைப்பதே காங்கிரஸ் கட்சியின் நோக்கம் என்றும், கட்சியின் கட்டமைப்பு வலுப்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் 10 மாவட்டங்களுக்கு உட்பட்ட சில இடங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

திண்டுக்கல், தேனி, சிவகங்கை, மதுரை, விருதுநகர், தென்காசி, தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களின் சில இடங்களில் கனமழை பெய்யும் என அந்த மையம் கூறியுள்ளது.

இதனிடையே திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டு, நிலக்கோட்டை, கொடைரோடு பகுதியில் பரவலாக கனமழை பெய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி, கரூர் உள்ளிட்ட மாவட்டங்களிலும் பரவலாக மழை பெய்துள்ளதாக எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தென்காசி மாவட்டத்திலும் பரவலாக மழை பெய்து வருவதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

கனமழை எச்சரிக்கையை அடுத்து கன்னியாகுமரி மாவட்டத்தில் உரிய முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

விருதுநகர் மாவட்டத்தில் உதவி எண்ணை அறிவித்து உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மாவட்ட நிர்வாகம் மேற்கொண்டுள்ளதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

இரண்டு நாள் பயணமாக சீனா சென்றுள்ள ரஷ்ய அதிபர் திரு விளாதிமிர் புடின் இன்று சீன அதிபர் திரு ஜீ ஜின்பிங்குடன் பேச்சு நடத்தவுள்ளார்.

<<<<>>>>

யுக்ரைனுக்கு கூடுதலாக 2 பில்லியன் டாலர் அளவுக்கு உதவிகள் வழங்கப்படும் என அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் திரு ஆண்டனி பிளிங்கன் அறிவித்துள்ளார்.

<<<<>>>>

குஜராத், திரிபுரா, மிசோரம் மாநிலங்களின் முன்னாள் ஆளுநரான கமலா பெனிவால் காலமானார். அவரது மறைவுக்கு குடியரசுத் துணைத் தலைவர் திரு ஜெக்தீப் தன்கர், பிரதமர் திரு நரேந்திர மோடி உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

<<<<>>>>

திருப்பத்தூரில் மக்கள் நல்வாழ்வுத்துறை அலுவலர்களுடன் மாவட்ட ஆட்சியர் திரு. தர்ப்பகராஜ் தலைமையில் மகப்பேறு இறப்பு விகிதம் மற்றும் பாலின விகிதம் தொடர்பான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

<<<<>>>>

இராமநாதபுரம் மாவட்டத்தில் உணவுப் பாதுகாப்புத்துறை அதிகாரிகள் மேற்கொண்ட சோதனையில, 800 கிலோ அளவிலான தடை செய்யப்பட்ட தேளி மீன்கள் பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டன.

<<<<>>>>

விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து குடிநீர் தொட்டிகளையும் 15 நாட்களுக்கு ஒரு முறை சுத்தம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் திரு சி பழனி கூறியுள்ளார்.

<<<<>>>>

கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை அருகே காட்டு யானை தாக்கியதில் ஒருவர் உயிரிழந்தார்.

<<<<>>>>

கொடைக்கானல் பிரையண்ட் பூங்காவில் 61வது மலர் கண்காட்சி நாளை தொடங்கவுள்ளதை முன்னிட்டு, சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் குறித்து மாவட்ட ஆட்சியர் பூங்கொடி ஆய்வு மேற்கொண்டார்.

<<<<>>>>

சென்னை கிண்டி அரசுத் தொழிற்பயிற்சி நிலையத்தில் பல்வேறு பயிற்சிகளில் சேர, ஜூன் 7-ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சியர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே கூறியுள்ளார்.

<<<<>>>>

தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் தொடர்பாக சென்னையில் கடந்த ஒரு வாரத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின்போது 71 பேர் கைது செய்யப்பட்டு, 69 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக மாநகர காவல்துறை தெரிவித்துள்ளது.

<<<<>>>>

_*விளையாட்டுச் செய்தி*_

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் பஞ்சாப் அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் ராஜஸ்தான் அணியை வென்றது.

ஹைதராபாதில் இன்று நடைபெறும் போட்டியில் ஹைதராபாத் அணி – குஜராத் அணியை எதிர்கொள்கிறது. இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

<<<<>>>>